# இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

# தேங்காய் விற்பனைக்கான கேள்வி விலை மனுக்கோரல்

(SEUSL/GA/IFQ/CP/2020/10)

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக ஒலுவில் வளாக தென்னந்தோட்டத்தில் காணப்படும் தேங்காய்களை கேள்வி மனுக்கோரல் அடிப்படையில் விற்பனை செய்ய பல்கலைக்கழகம் தீர்மானித்துள்ளது.

தேங்காய்களை கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் மரங்களிலுள்ள தேங்காய்களை தனது சொந்த செலவிலும் தனது பணியாட்களை பயன்படுத்தியும் பறிப்பதற்கும், குறிப்பிட்ட இடத்தில் சேகரிப்பதற்கும் தயாராக இருத்தல் வேண்டும் என்பதுடன் முதலில் ஏறு மரங்களில் தேங்காய்களை பறித்த பின்னரே ஏனைய மரங்களில் தேங்காய்களை பறித்தல் வேண்டும். சேகரிக்கப்பட்ட தேங்காய்கள், பல்கலைக்கழக மேற்பார்வையாளர்களின் முன்னிலையில் கணக்கிடப்பட்டு அதற்கான பணத்தினை செலுத்திய பின்னர் வெளியில் எடுத்துச்செல்ல அனுமதிக்கப்படும். இவ்வாறு பறித்து, **சேகரிக்கப்பட்ட ஒரு தேங்காயின் ஆகக்குறைந்த விலை ரூபா. 23.00 என தீர்மானிக்கப்பட்டுள்ளது.** (தேங்காய்களை பெரியது சிறியது என வேறுபடுத்த இடமளிக்கப்படமாட்டாது என்பதுடன் மொத்தமாக பறிக்கப்பட்ட தேங்காய்களின் எண்ணிக்கையில் 5% புச்சி மற்றும் சிறிய தேங்காய்களுக்காக கழிக்கப்படும்)

இதற்கான விண்ணப்பப்படிவத்தினை, மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. 1,000.00 மும் மீளளிப்பு செய்யக்கூடிய வைப்புக்கட்டணமாக ரூபா. 5,000.00 யினையும் பல்கலைக்கழக சிறாப்பரிடம் செலுத்திய பற்றுச்சீட்டை சமர்ப்பிப்பதன் மூலம் **06.02.2020ம் திகதி நண்பகல் 02.00 மணி** வரை அலுவலக நேரங்களில் பிரதிப்பதிவாளர், பொது நிருவாகம் அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை மூடிய கடித உறையிலிட்டு பதிவாளர் காரியாலயத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டிக்குள் **07.02.2020ம் திகதி பி.ப. 2.45 மணிக்கு** முன்னர் இடல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிக்கு பெப்ரவரி 08ம் திகதி தொடக்கம் 12ம் திகதி வரை தேங்காய் பறிப்பதற்கு அனுமதி வழங்கப்படும். பறிக்கப்பட்ட அனைத்து தேங்காய்களையும் அதற்கான கொடுப்பனவு முழுவதையும் செலுத்தி 14.02.2020ம் திகதி பி.ப 5.30 மணிக்கு முன்னராக வளாகத்தை விட்டு எடுத்துச்செல்லுதல் வேண்டும்.

07.02.2020ம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு விலைமனுக்கள் உடைக்கப்பட்டு ஆகக்கூடிய கேள்விதாரருக்கு தேங்காய் பறிப்பதற்கான அனுமதி வழங்கப்படும். இது தொடர்பான மேலதிக விபரங்களை பல்கலைக்கழக கியுரேட்டர் அவர்களிடமிருந்து அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ள முடியும். (தொலைபேசி இலக்கம் - 067-2255053)

எந்தவொரு விலைமனுவையும் ஏற்றுக்கொள்ளவோ அல்லது நிராகரிக்கவோ பல்கலைக்கழகத்துக்கு பூரண உரிமை உண்டு என்பதை கவனத்திற் கொள்க.

**பதிவாளர்**
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
30.01.2020